بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/10/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۙ۬ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

இன்றும் தபூக் போரின் நிகழ்வுகளைப் பற்றிய மேலும் விவரங்களை எடுத்துக் கூறுவேன். ஜத் பின் கைஸ் என்ற ஒரு நபரின் நிகழ்வு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவரும் நயவஞ்சகர்களில் ஒருவராக இருந்தார். இவர் அப்துல்லாஹ் பின் உபைக்குப் பிறகு நயவஞ்சகர்களின் இரண்டாவது பெரிய தலைவராக இருந்தார். இவர்தான் ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் தருணத்திலும் பைஅத் செய்யாமல் இருந்தவர் ஆவார். இவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து போரில் செல்லாமல் இருப்பதற்கு சாக்குபோக்கு சொன்னார். இதைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இவர், ‘யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} எனக்கு விலக்கு அளித்திடுங்கள். என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! என்னை விட அதிகம் பெண்களை நேசிப்பவர் எவரும் இல்லை என்று என்னைப் பற்றி என் சமுதாயத்திற்கு நன்றாகத் தெரியும். அஸ்ஃபர் கோத்திரத்தின், அதாவது, ரோமானிய பெண்களைப் பார்த்து விட்டால் என்னால் பொறுமைகாக்க முடியாது’ என்று கூறினார். இதைக் கூறியதும், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அருவருப்பான பதிலைக் கேட்டு முகந்திருப்பி விட்டார்கள். மேலும், “சரி, போ! உனக்கு அனுமதி அளிக்கிறேன்” என்று கூறினார்கள்.

இவருடைய மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் (ரலி) அவர்கள் பத்ர் சஹாபி ஆவார்கள். மிகவும் கலப்பற்ற மனிதர் ஆவார்கள். அவர்கள் இந்த எல்லா விஷயங்களையும் கேட்டு சினங்கொண்டார்கள். அவர்கள், ‘இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் போருக்குச் செல்லாமல் இருப்பதற்குக் காரணம் நயவஞ்சகம் ஆகும். அல்லாஹ்வின்

மீது ஆணையாக! உம்மைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கண்டிப்பாக திருக்குர்ஆன் வசனம் இறங்கும்' என்று கூறினார்கள். ஓர் அறிவிப்பில் உள்ளது, ஜத் பின் கைஸ் பற்றி இந்த வசனம் இறங்கியது:- وَمِنۡهُمۡ مَّنۡ يَّقُوۡلُ ائۡذَنۡ لِّىۡ وَلَا تَفۡتِنِّىۡ

பொருள்: இவர்களில், 'எனக்கு விலக்கு அளித்திடுவீராக. என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடாதீர்' என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

பிற்காலத்தில் இவர் தவ்பா செய்தார், நல்ல முறையில் தவ்பா செய்தார் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத் ஆனார் என்று கூறப்படுகிறது.

மதீனாவில் நயவஞ்சகர்களும் யூதர்களும் பொய்யான வதந்திகளைப் பரப்பிவிட்டு முஸ்லிம்களின் மன உறுதியைக் குலைப்பதற்கும், முஸ்லிம்களைப் போருக்கு செல்ல விடாமல் தடுப்பதற்கும் முழு முயற்சி செய்வார்கள். இதற்காக அவர்கள் பல வகையான தந்திரங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். தமக்கென ஒரு மையத்தை உருவாக்கி வைத்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த மையத்தை இல்லாமல் செய்யுமாறு ஆணையிட்டார்கள்.

மாநபி (ஸல்) அவர்கள் தமது கருணை மற்றும் பரிவின் காரணமாக இந்த மக்களைக் கண்டும்காணாமல் இருந்துவந்தார்கள்தான்; ஆயினும், அமைப்புக்கு எதிராக ஏதாவது பயங்கரமான சதி நடக்கும்போது, அதைப் பெரும் நுட்பஞானத்துடன், அதே வேளையில், கண்டிப்புடன் முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வந்தது.

இந்த அடிப்படை கொள்கையை நினைவில் கொள்ள வேண்டும்! அமைப்புக்கு எதிராக ஏதாவது ஒரு விஷயம் வந்தால், பிறகு கண்டிப்பும் காட்டப்படுகிறது. பிறகு, அங்கு மென்மை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆக, இதே போன்ற ஒரு நடவடிக்கை இந்தத் தருணத்திலும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் கருணை மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் மன்னித்தல் பிறகும்கூட எப்படி மேலோங்கியது என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களில் எவரையும் சிறைபிடிக்குமாறும் கட்டளை பிறப்பிக்கவில்லை; மேற்கொண்டும் எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. எனினும், சூழ்ச்சிகளுக்கான இந்தக் கூடாரத்தை, அதாவது, தலைமையகத்தை அழித்து விட்டார்கள்.

தபூக்கின் பயணத்திற்காக ஒவ்வொருவரும் ஆயத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்தார். பயணச் செலவுகளுக்கான ஏற்பாடு ஆவதற்காகப் பொருள் தியாகம் செய்வதும் தொடர்ந்து வந்தது. ஏழை, இயலாத சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) பெருமானார் (ஸல்) அவர்களிடம் வருவார்கள். அப்பொழுது ஆயத்தம் செய்வதற்காக அவர்களுக்கு உதவி செய்யப்படும். இவ்வாறே எந்த சஹாபாவிடம் பயண விலங்கு இருக்கவில்லையோ அவர்களுக்கும் வசதிபடைத்த மக்கள் பயண விலங்குகள் ஏற்பாடு செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், பயண விலங்கு இல்லாமல் இந்தப் பயணம் சாத்தியமாகவும் இருக்கவில்லை. நபி பெருமானார் (ஸல்) அவர்களும், "வலுவானவர்கள், பயணத்தின் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ள முடிந்தவர்கள், பயண விலங்கு மற்றும் வழிக்குத் தேவையானவற்றைக் கொண்டிருப்பவர்கள் ஆகியோர் மட்டுமே எங்களுடன் வரட்டும்" என்று வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள்.

இந்தத் தருணத்தில் சில சஹாபா அழுது கொண்டே பெருமானார் (ஸல்) அவர்களிம் வந்தார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் பயண விலங்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் தேவையுடையவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் "உங்களை ஏற்றி அனுப்ப என்னிடமோ இப்பொழுது எதுவும் இல்லை" என்று கூறினார்கள். இதனால் அவர்கள் அழுதவாறு திரும்பிச் சென்று விட்டார்கள். அந்த சஹாபாவின் கலப்பற்ற தன்மை, நன்றியுணர்வு மற்றும் இயலாமை இந்த நிலையைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَآ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ اَجِدُ مَآ اَحْمِلُكُمْ عَلَيْهِ ۠

تَوَلَّوْا وَّاَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا اَلَّا يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ ﴿٩٢﴾

"போருக்கான அறிவிப்பு செய்யப்பட்டபோது, நீர் அவர்களுக்குப் பயண விலங்குகளை ஏற்பாடு செய்துதரக் கோரி உம்மிடம் வந்த இந்த மக்கள் மீது குற்றம் எதுவும் இல்லை. நீர், 'நான் உங்களை ஏற்றி அனுப்பிட என்னிடம் எதுவும் இல்லை' என்று பதில் அளித்தீர். இந்த பதிலைக் கேட்டு அவர்கள் சென்று விட்டார்கள். அந்தோ! இறைவழியில் செலவு செய்யத் தம்மிடம் எதுவும் இல்லையே என்ற இந்தத் துயரத்தினால் அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது." இது சூரா தவ்பாவின் வசனம் ஆகும்.

பின்னர் இந்த சஹாபாவுக்குப் பயணத்துக்குத் தேவையானவை ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன. பிறகு, அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி) அவர்களின் கோத்திரத்தின் மக்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் பயண விலங்கு வழங்குமாறு கோரினார்கள். இவர்கள் ஆறு பேர் இருந்தார்கள். இவர்கள் அபூ மூஸா (ரலி) அவர்களைத் தம் பிரதிநிதியாக்கி ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அவர்களிடமும் நபி (ஸல்) அவர்கள், "நான் உங்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை" என்று கூறினார்கள். இதனால் அந்த மக்கள் அழுது கொண்டே அங்கிருந்து திரும்பிச் சென்றார்கள். ஆனால், இதற்கிடையிலேயே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்களிடமிருந்து ஒட்டகங்களை விலைக்கு வாங்கினார்கள். மேலும், ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்களை வரவழைத்து, "இந்த ஒட்டகங்களை எடுத்துச் செல்லுங்கள். நீங்களும் எடுத்துக் கொண்டு உங்கள் நண்பர்களுக்கும் கொடுங்கள்" என்று கூறினார்கள்.

இந்தப் போருக்காக செல்லும்போது மதீனாவில் பிரதிநிதி நியமித்தது குறித்து பல்வேறு கூற்றுகள் கிடைக்கின்றன. ஒரு கூற்றுக்கு ஏற்ப, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களை மதீனாவில் தம் அமீராக நியமித்தார்கள். இவர்கள் மட்டுமின்றி, ஹஸ்ரத் சிபாஃ பின் உர்ஃபதா, ஹஸ்ரத் அலீ மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மு மக்தூம் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் பெயர்களும் வருகின்றன.

இவை இவ்வாறு இணக்கப்படுத்தப்படுகின்றன:- இந்த நான்கு பேருமே பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டார்கள்தான்; ஆயினும், இவர்களுக்கான பொறுப்புகளில் வித்தியாசம் இருந்தது. இது ஒரு பெரிய பயணமாக இருந்தது. எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வீட்டு மக்களைப் பார்த்துக் கொள்வதற்காகவும், வீட்டுத் தேவைகளை முழுமைப்படுத்துவதற்காகவும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு மதீனாவிலேயே இருக்குமாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

நிந்திப்பதையும் பழிகூறுவதையும் மட்டுமே வேலையாகக் கொண்டிருந்த நயவஞ்சகர்கள் இதை வைத்து, 'இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சுமையாக இருந்தார். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் இவரை உடன் அழைத்துச் செல்லவில்லை' என்று கதை கட்டினார்கள்.

இந்த நிந்தனைகளைக் கேட்டு அல்லது அக்கம்பக்கம் நயவஞ்சகர்களைப் பார்த்து, சுயமே பதற்றமடைந்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுது மதீனாவிலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஜர்ஃப் எனும் இடத்திலேயே தங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது கவலையையும் பதற்றத்தையும் பற்றி கூறியபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஆறுதல் அளித்தவாறு எப்படிப்பட்ட வாக்கியத்தைக் கூறினார்கள் என்றால், அது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெருமை மற்றும் மேன்மையை மேலும் மெருகூட்டியது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், “அலீயே! நீர் எனக்குப் பிறகு நபியாக இருக்க மாட்டீர் என்பதைத் தவிர, ஹாரூன் மூஸாவுக்கு இருந்ததைப் போன்றே நீர் எனக்கு இருக்கின்றீர் என்பதில் நீர் மகிழ்ச்சி அடையவில்லையா?” என்று கேட்டார்கள்.

தபூக் போருக்காக முஸ்லிம்களின் எண்ணிக்கை பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போருக்கான ஆயத்தம் செய்வதற்காக எல்லா விதமான வெளிப்படையான காரணிகளை மேற்கொண்ட பிறகு, துஆவின் பக்கம் திரும்பினார்கள். ஆயத்தம் செய்யத் துவங்கியதிலிருந்து தபூக்கை நோக்கி புறப்படும் வரை இந்த துஆவை செய்து வந்தார்கள்:

اَللّٰهُمَّ اِنْ تُهْلَكْ هٰذِهِ الْعِصَابَةُ فَلَنْ تُعْبَدَ فِي الْاَرْضِ

பொருள்: அல்லாஹ்வே! இந்த சிறிய ஜமாஅத் அழிந்து விட்டால், இந்த மண்ணுலகில் உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் போர், அதாவது, பத்ர் போரின் தருணத்திலும் இந்த துஆவை செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், மாநபி (ஸல்) அவர்களின் இந்தக் கடைசி போரின் தருணத்திலும் இந்த துஆவையே செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது விந்தையான தற்செயல் நிகழ்வாகும்.

எவ்வாறாயினும், கடுமையான வெயில் காலம், நீண்ட பயணம், இதர பல பிரச்சினைகள் மற்றும் நயவஞ்சகர்களின் பிரச்சாரம் ஆகியவை இருந்தும், 30,000 பேரைக் கொண்ட ஒரு மிகப் பெரிய படை ஆயத்தமாகி விட்டது. இதில் 10,000 குதிரை வீரர்கள்

இருந்தார்கள். இது மாநபி (ஸல்) அவர்களின் வாழ்நாளில் நடந்த போர்களில் எல்லாவற்றையும் விடப் பெரிய படையாக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் போரில் மிகப் பெரிய கொடியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். இது மட்டுமின்றி, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி), ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அல்லது சில அறிவிப்புகள்படி ஹஸ்ரத் ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) ஆகியோருக்கும் கொடிகள் வழங்கப்பட்டன.

தபூக் போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழியைக் காட்டுபவராக அலக்கமா பின் ஃபக்வா ஃஹுஸாஈ மற்றும் அவர்களின் தந்தையைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் வழிகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். விரைவாக சரியான வழியின் மூலமாக அழைத்துச் செல்லக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: தபூக் போருக்காக கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் வியாழக்கிழமை அன்று புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் வியாழக்கிழமை பயணம் செய்வதைப் பெரிதும் விரும்பினார்கள்.

*இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜமாஅத் முரப்பி* ***மதிப்பிற்குரிய குலாம் முஹ்யுத்தீன் சுலைமான் சாஹிப்,*** *ரப்வாவின் முன்னாள் நாயிப் வக்கீலுத் தஸ்னீஃப் தஹ்ரீகே ஜதீத்* ***மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மத் ஷஃபீக் சஹ்கல் சாஹிப்*** *மற்றும் USA வைச் சேர்ந்த பர்வேஸ் மின்ஹாஸ் சாஹிப் அவர்களின் துணைவியார்* ***மதிப்பிற்குரிய புஷ்ரா பர்வேஸ் மின்ஹாஸ் சாஹிபா*** *ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகை தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மர்ஹூம்களின் மஃக்ஃபிரத் மற்றும் உயர்ப்படித்தரத்திற்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ

سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا

عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ

وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**